# 11. பேசாவாழ்வு.

***எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.***

**பொ**ன்னுலகு மண்ணுலகும் போற்று ஞான
பூரணமே யாரணமே புகல வொண்ணா
நன்னிலையே யென்னினைவே நலியா வாதி
நாயகமே தாயனைய நட்பே யெற்கீண்
டுன்னிலையெல் லாமோர வுணர்வீந் தாய்மற்
றொருகுறையை நீத்தில்லை யுனையே யல்லாற்
பின்னொருவர் தமியேற்கு முளரோ வெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 1

**கு**த்தியகத் துளநிட்சே பத்தைக் காணக்
கூரலகால் வெட்டுவதே வழியல் லால்வே
றுத்தியிலை யேயின்னே மலத்துண் ணாளும்
ஒளியின்றி நிற்பவனைக் காணற் குன்றன்
முத்தியருண் முயல்வலது பிறிதின் றென்னா
மொழியுமொழி பெட்டிலையே முன்னும் பின்னும்
பெத்தர்களுக் கருளிறையே யருளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 2

---

2. **குத்தி** = மண், பூமி ; **தகரவெதுகை.** **பெட்டு** = பொய்; **சூ – நிகண்டு.**

**பொ**ருபிணிக்கு மெரிபசிக்கு முரிய பாழ்த்த
புலையுடம்பைச் சுமந்துதிரி புன்னெஞ் சேற்குன்
திருவருடா னில்லையெனிற் கணக்கா லேனுஞ்
சிந்தையொரு வழிப்படுமோ சீர்மை யாமோ
குருவடிவாய் வந்தினிய வமுதம் போலக்
குயின்றுவினா வியவாய்மை யெவ்வா றென்னைப்
பெருவெளியாச் செய்யுமருட் பேறே யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 3

**உ**ன்னருளா லுனைக்கருதி யிருக்கு மிஞ்ஞான்
றுறுநோயுங் கலிப்பேயும் வருத்து மாயின்
என்னசுக மடைகுவலுன் பெரிய வீர
மெளியேன்பா லின்னணமோ விருந்த தச்சோ
சொன்னவண மருள்வையென்ற தீர்வை யொன்றே
தொழும்பன்வெளி மலையிலக்காக் கொண்ட தற்கோர்
பின்னமெய்தா தருள்பாலித் தாளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 4

**பே**டிபெண்ணைக் காமுறல்போற் கல்வி யில்லான்
பெருங்கழகம் புகவெணல்போற் றிருவில் லாதான்
பாடிபுகழ் வள்ளலெனும் பெயரொன் றேற்கப்
படிமீது சூழ்வதுபோற் பதியா முன்னை
நேடிநிற்கும் பேரளியில் லாத நாயே
னீடருள்வாழ் வடையநினைக் கின்றே னின்பப்
பீடிகைமே னீவைத்தால் வாழ்வே னெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 5

**வீ**தலிலாப் பெருமவுன்னை யடைவே னாயின்
மிகுகுறளற் குயர்தருத்தே னெட்டல் போலும்
ஆதுலற்கு நிட்சேபம் வாய்த்தாற் போலு
மந்தகற்குக் கண்பிராத்தி யானாற் போலும்

3. **புலை** = புலால்.

4. **நோய்** - 'நொ' என்னும் பகுதியி னடியாப்பிறந்த தொழிற்பெயர்; நோ எனவும்படும்; நோவு எனப்படின் உ அல்லது வு - விகுதியாம்.

5. **பாடி** = நாடு, **பேரளி** = பெரிய அன்பு.

6. **ஆதுலன்** = தரித்திரன், வலித்தல் = நினைத்தல்; **சூ - நிகண்டு.**

ஏதமறக் குணிக்குவாக் குற்றாற் போலு
மெனவலிக்க யாதுதடை யெந்தா யெந்தாய்
பேதமிறக் கருணைசுரந் தருளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 6

**மா**றின்றிப் பனித்திடுநின் கருணை வான
மாணடியா ராம்பைங்கூழ்க் கிரங்கா தாயின்
ஊறின்றித் தழைப்பதெங ணக்கோ வக்கோ
வுன்னையலாற் புகல்சிறிதுந் தனியேற் குண்டோ
காறின்றிக் கசடுபல செய்தே னேனுங்
கருணையுளோய் நின்னடிமை யாகா நின்றேன்
பேறண்ணுந் தனியருள்செய் தாளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 7

**த**ரணிவதி புருடர்குண மேது மில்லாத்
தனிப்பிரமப் பொருளாய பெரியோ யுன்னைப்
புரணிபொலி புருடர்குணப் புல்லர் யாங்ஙன்
புகரறவே தானறிவார் பூர்த்தி யாய
கிரணவருள் கிடைத்தானான் வாழ்வே னல்லாற்
கிஞ்சித்தும் வாழேனென் கிழமைக் காய
பிரணவ சுவாமியருள் புரியா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 8

**அ**சைத்தாட்டு நின்செயலா லடியே னுன்ற
னருள்வேண்டி யேமுயலா விடினு மானா
முசுப்பிடியா முயலினுமுன் கிருபை யாங்கே
முன்னிருந்து முடிக்காதேற் பயனே னெந்தாய்
தசத்திசையுந் தொழுமாளிக் கெனைத்தா னாக்கிச்
சகசசுகம் பெறவுளத்தி னினைத்தல் வேண்டும்
பிசிப்போதஞ் செகுத்துணர்வார் பேறே யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. 9

7. **அக்கோ** = அதிசயவிரக்க மொழி; **பி - நிகண்டு.**

8. **புரணி** = உடல், புறணியென்பதன் விகார மெனினுமாம்.

9. **தசதிசை** என நிற்கற்பாலது ஏனையடி முதற்சீரோசை நோக்கித் ‘தசத்திசை’ என வலி மிகுந்துற நிற்பதாயிற்று. **பிசி** = பொய்.

**ந**ன்றில்லேன் றீதுள்ளே னசைமிக் குள்ளேன்
ஞானமில்லே னூனமுள்ளே னல்லார் கொள்கை
ஒன்றுமில்லே னுண்மையில்லே னின்மை யுள்ளே
னுனைநசைஇக் கறையிகந்து பரமா னந்தம்
என்றுமுறப் படர்ந்தேனிங் கெந்தா யெந்தா
யீரமிகுந் தருளனந்தம் புகழ்சொற் றாற்குப்
பின்றையெனா துடனளித்தாள் குகேசா வெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே.